# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2st Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | Three Hours<br>Gr -12 (2022) | 22 T I |

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**

- இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 20 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III, பகுதி IV, பகுதி V ஆகிய பகுதிகளில் இருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

1. 1:50,000 இடவிளக்கப்படங்களில் பயிர்ச்செய்கைப் பரம்பலை எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுகின்ற நிறங்கள்
   (1) சிவப்பு, கறுப்பு (2) பச்சை, நீலம் (3) மஞ்சள், பச்சை
   (4) மஞ்சள். நீலம் (5) கபிலம், கறுப்பு (………)

2. இலங்கையின் மாவட்ட அடிப்படையிலான பயிர்களின் பரம்பல்
   (1) இடம்சார் தரவு (2) இடம் சாராத தரவு (3) பண்பு சார் தரவு
   (4) தொடர்தரவு (5) தொடர்ச்சியற்ற தரவு (………)

3. தெரிவு செய்யப்பட்ட குறித்த ஒரு விடயம் சார்ந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் படங்கள்
   (1) சமவுரயக் கோட்டுப்படம் (2) இடக்கணியப்படம் (3) நிழற்படங்கள்
   (4) கருப்பொருள் படங்கள் (5) இடவிளக்கப் படங்கள் (………)

4. புவியியல் தகவல் முறைமையின் (GIS) பரவல் தரவில் ஆராய்ச்சி தரவுகள் காட்டப்படும் முறை யாது?
   (1) புள்ளிகள் மூலம் (2) கோடுகள் மூலம் (3) பல் கோணங்கள் மூலம்
   (4) பல் சதுரங்கள் மூலம் (5) நிரல்கள், நிரைகள் மூலம் (………)

5. செய்மதிகள் பயணம் செய்வதற்கு ஏற்றவகையில் புவிமேற்பரப்பு வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ் வலயங்களின் எண்ணிக்கை யாது?
   (1) 5 (2) 6 (3) 8
   (4) 10 (5) 12 (………)

6. தொலையுணர்வு தொழில்நுட்பத்தின் தரைமேற்பரப்பு மேடையைப் பயன்படுத்தி தரவு சேகரிக்கும் போது தொலையுணர்வுக்குரிய உபகரணம் பொருத்தப்பட்டிருப்பது.
(1) வான்வெளி விமானத்தில்
(2) புகைப்படக்கருவியுள்ள விமானத்தில்
(3) அசையும் வாகனத்தில்
(4) சிறியரக விமானத்தில்
(5) விண்வெளி ஓடத்தில் (.........)

7. புவியோட்டின் மேல் பெரியளவிலான மலைத்தொடர்கள் உருவாவதற்குக் காரணமான விசை
(1) குத்தான விசை (2) அமுக்க விசை (3) இழுவிசை
(4) மலையாக்க விசை (5) கிடையான விசை (.........)

8. பின்வருவனவற்றில் இருந்து மண்ணின் இரசாயனப் பண்பினை உள்ளடக்கிய விடையைத் தெரிக.
(1) மண்ணின் நிறம் (2) மண்ணின் அமிலத்தன்மை (3) மண்ணின் இழையமைப்பு
(4) மண் நீர் (5) மண்ணின் கனியம் (.........)

9. வளிமண்டலத்தின் மொத்தவளி உள்ளடக்கத்தில் 96% சதவீதமான வாயுக்கள் பரந்துள்ள மண்டலம் எது?
(1) மாறன் மண்டலம் (2) படைமண்டலம் (3) இடைமண்டலம்
(4) வெப்பமண்டலம் (5) அயன் மண்டலம் (.........)

10. உருண்டை கற்றிரள், களி என்பன
(1) பொறிமுறையில் உருவான அடையற்பாறை
(2) இரசாயன முறையில் உருவான அடையற்பாறை
(3) சேதன முறையில் உருவான அடையற்பாறை
(4) உருமாறிய பாறை
(5) தீப்பாறை (.........)

11. காரக்கற்ரோவா, விசுவியஸ், ஹெக்லா போன்ற எரிமலைகள் காணப்படுகின்ற நாடுகள் முறையே
(1) அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான்
(2) இந்தோனேசியா, இத்தாலி, ஐஸ்லாந்து
(3) ஐஸ்லாந்து, ஜப்பான், இத்தாலி
(4) பிலிப்பைன்ஸ், ஐஸ்லாந்து, இத்தாலி
(5) அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், ஜப்பான் (.........)

12. எகிப்தின் வடமேற்கில் உள்ள குவாட்ரா பள்ளம் உருவாகக் காரணம்
(1) காற்றின் படிதல் செயற்பாடு
(2) காற்றின் தேய்த்தல் செயற்பாடு
(3) காற்றின் வாரியிறக்கல் செயற்பாடு
(4) காற்றின் கொண்டுசெல்லல் செயற்பாடு
(5) காற்றின் அரைந்து தேய்த்தல் செயற்பாடு (.........)

13. புவித் தெறிப்பு என்பது
(1) குறிப்பிட்ட காலத்தில் ஓரிடத்தில் நிலவும் வெப்பநிலை
(2) வானிலை மூலக்கூறுகளின் சராசரித் தொகுப்பு
(3) சிற்றலைக் கதிர்களாக சூரியனிலிருந்து பெறப்படும் சூரியக்கதிர்கள் நெட்டலைகளாக வளிக்கோளத்தில் தெறிப்படைவது
(4) நெட்டலைக் கதிர்களாக சூரியனிலிருந்து பெறப்படும் சூரியக் கதிர்கள் சிற்றலைகளாக வளிக்கோளத்தில் தெறிப்படைவது
(5) சிற்றலைக் கதிர்களாக சூரியனிலிருந்து பெறப்படும் சூரியக் கதிர்கள் நெட்டலைகளாக புவிக்கோளத்தில் தெறிப்படைவது (.........)

14. சனத்தொகைக் கட்டமைப்பின் பிரதான அலகுகள்
(1) வயது, பால்
(2) பிறப்பு, இறப்பு
(3) பிறப்பு, இடப்பெயர்வு
(4) இறப்பு, சிசுமரணவீதம்
(5) குடிவரவு, குடிப்பெயர்வு (………)

15. இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாகக் காணப்படும் காலநிலை வலயம்
(1) தாழ்நில உலர்வலயம்
(2) தாழ்நில ஈரவலயம்
(3) அரைவரள் வலயம்
(4) உயர்நில உலர்வலயம்
(5) உயர்நில ஈரவலயம் (………)

16. இலங்கையில் சர்வதேச இடப்பெயர்வு அதிகளவில் நிகழும் மாகாணம் எது?
(1) வடமாகணம்
(2) தென்மாகாணம்
(3) வடமத்திய மாகாணம்
(4) ஊவா மாகாணம்
(5) மேல் மாகாணம் (………)

17. இலங்கையில் தங்கும் நகரங்களைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிக.
(1) கதிர்காமம், திஸ்ஸமாரகம்
(2) கண்டி, அநுராதபுரம்
(3) கோட்டை, கண்டி
(4) பிலியன்தல, கடுவல
(5) மகரகம, கோமாகம (………)

18. மத்திய ஐரோப்பா பிரதேசத்தினை உள்ளடக்கி பரவலடைந்துள்ள நகராக்க வலயம் எது?
(1) புளுபனானா (Blue Banana)
(2) கோல்டன் பனானா (Golden Banana)
(3) கிறீன் பனானா (Green Banana)
(4) ஜெலோ பனானா (Yellow Banana)
(5) ரெட்பனானா (Red Banana) (………)

19. இந்தியாவின் முப்பாய் நகரத்தில் அமைந்துள்ள சேரிக் குடியிருப்பின் பெயர் என்ன?
(1) நொச்சிக்குப்பம் (2) தாராவி (3) பசான்ரி
(4) சரேஸ் நகரம் (4) ராஜேந்த நகர் (………)

20. இலங்கையில் குறைவான நகராக்க மட்டத்தினைக் கொண்டுள்ள மாவட்டங்கள்
(1) குருநாகல், கேகாலை
(2) பதுளை, மொனரா கலை
(3) முல்லைத்தீவு, கிளிநொச்சி
(4) இரத்தினபுரி, புத்தளம்
(5) அம்பாந்தோட்டை, அம்பாறை

# பகுதி - II

**அறிவுறுத்தல்**

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப்படமும் வழங்கப்படும்
- இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத்தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி 20 மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு
- படத்தின் மேல் விடைகள் எழுதக் கூடாது
- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்

1. (i) உமக்குத்தரப்பட்ட 1:50,000 இடவிளக்கப்படத்தின் பரப்பளவினைச் சதுர km தருக. *(02 புள்ளிகள்)*

   (ii) *1-4* வரை இலக்கமிடப்பட்டுள்ள பௌதிக பண்பாட்டம்சங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (iii) (a) உமக்கு வழங்கப்பட்ட பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பிறபயிர்கள் இரண்டின் பெயர்களை அடையாளம் காண்க. *(01 புள்ளி)*

   (b) இப்பிரதேசத்தில் செய்கைபண்ணப்படும் பெருந்தோட்டப் பயிர் ஒன்றினைப் பெயரிடுக. (01 புள்ளி)

   (iv) (a) இப்பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புகளின் வடிவங்கள் இரண்டினைத் தருக. *(01 புள்ளி)*

   (b) இப்பிரதேசத்தில் பரந்துள்ள வீதிகளின் பெயர்களை எழுதுக. *(02 புள்ளிகள்)*

   (c) இப்பிரதேசத்தில் வாழும் மக்களுடன் தொடர்புடைய மதங்கள் இரண்டினைத் தருக. *(01 புள்ளி)*

   (v) இப்பிரதேசத்தின் நெற்பயிர்ச் செய்கையின் பரம்பலைத் தீர்மானித்த இரண்டு காரணிகளை சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளகள்)*

   (vi) உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தின் வடபகுதியின் குடியிருப்புப் பாங்கு தொடர்பாக விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

2. தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

   (i) பிரனீஸ் மலைத்தொடர்

   (ii) மறேடாலிங் நதி

   (iii) கருபியன் கடல்

   (iv) தாஸ்மானியா தீவு

   (v) அகுகாஸ் நீரோட்டம்

   (vi) கிறீன்விச் கோடு

   (vii) அற்றக்காமா பாலைவனம்

   (viii) தித்திகாக ஏரி

   (ix) 62.5% சதவீதமான நகரக் கழிவுகள் ஆறுகள், கால்வாய்களில் வீசப்படும் பங்களாதேசின் நகரம்

   (x) ஆபிரிக்காவில் மிகக் குறைவான நகராக்கத்தினைக் கொண்டுள்ள நாடு. *(10 புள்ளிகள்)*

## பகுதி - III பௌதிகப் புவியியல்

3\. (i) புவிக்கோளத்தின் இரண்டு பிரிவுகளைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கையின்

A - ஈரவலயத்திற்குரிய மண்வகைகள் இரண்டு

B – உலர்வலயத்திற்குரிய மண் வகைகள் இரண்டு என்பவற்றைத் தருக. *(02 புள்ளிகள்)*

(iii) மண்ணின் குறுக்க வெட்டு முகத்தினை வரைந்து அதன் படைகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) மேலே (iii) வரைந்த மண்ணின் படையமைப்புக்களைச் சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

4\. (i) புவியின் பிரதான தகடுகள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) தகடுகள் அசைவிற்குட்படுகின்ற மூன்று முறைகளை விளக்கப்படத்தின் உதவியுடன் சுருக்கமா விளக்குக. *(03 புள்ளிகள்)*

(iii) ஆற்றின் இளமைப்பருவத்தில் காணக்கூடிய அம்சங்கள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(iv) ஆற்றிரிப்பினால் உருவாகின்ற நிலவுருவங்கள் இரண்டினை விளக்கப்படத்தின் உதவியுடன் விபரிக்குக. *(03 புள்ளிகள்)*

## பகுதி - IV மானிடப்புவியியல்

5\. (i) குடியிருப்பு என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) குடியிருப்பின் வகைகள் இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் நகரமயமாக்கத்துடன் தொடர்புடைய போக்குகளை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. *(03 புள்ளிகள்)*

(iv) அபிவிருத்தி அடைந்த, அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் நகராக்கம் தொடர்பான இரண்டு பொதுப்பிரச்சினைகளை விளக்குக. *(03 புள்ளிகள்)*

6\. (i) உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய நான்கு பிரதேசங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) 6(i) இல் குறிப்பிட்ட பிரதேசங்களில் ஒன்றின் சனத்தொகை அடர்த்தியைத் தீர்மானித்த இரண்டு காரணிகளை சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) குடிப்பெயர்வு என்பதனால் கருப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(iv) குடிப்பெயர்வைத் துரிதப்படுத்துகின்ற இரண்டு காரணிகளைத் தருக? *(02 புள்ளிகள்)*

## பகுதி - V செய்முறைப் புவியியல்

7. (i) செய்மதிப் படிமம் என்பதனால் கருதப்படுவது யாது? *(01 புள்ளி)*

 (ii) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை ஒன்றின் பிரதான கூறுகள் இரண்டினைத் தருக. *(02 புள்ளிகள்)*

 (iii) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையின் இரண்டு நன்மைகளை சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

 (iv) இலங்கையில் நவீன படவரைகலையியல் நுட்பமுறைகளின் பயன்பாடு தொடர்பாகக் காணப்படும் மூன்று வரையறைகளைத் தருக. *(03 புள்ளிகள்)*

8. (i) இடவிளக்கப்படம் என்பனால் கருப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

 (ii) இடவிளக்கப்படங்களின் பயன்பாடு இரண்டு தருக. *(02 புள்ளிகள்)*

 (iii) காவித்தரவு, பரவல் தரவு வேறுபடுத்துக. *(03 புள்ளிகள்)*

 (iv) தொலையுணர்வு தொழில்நுட்பத்தில் (RS) உணர்விகள் பொருத்தப்படும் மூன்று மேடைகளைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்  இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021**

**தரம் 12 (2022) புவியியல்**

